**லங்கா சத்தொச லிமிடெட் கம்பனி - 2023**

-----------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

லங்கா சத்தொச லிமிடெட் கம்பனியின் (''கம்பனி'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டம் மற்றும் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுப்பிற்குள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும்

முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனியின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடன் உடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 32 மற்றும் 33 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஈடுசெய்ய முடியாது இருந்த போதிலும் பெற வேண்டிய கணக்குகளுக்கு உரிய ரூபா 14,115,752 ஆன செலவு மீதியை இனங்கண்டு தேவையான சீராக்கங்கள் கணக்குகளில் மேற்கொள்வதற்குப் பதிலாக பெறவேண்டி கணக்கு மீதிகளில் ஈடு செய்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக மேலதிக இணக்கங்கள் மேற்கொள்ளப்படுவதுடன் எதிர்காலத்தில் சரியாக கணக்கீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்களில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தனித்தனியாகக் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 54 ஆம் பந்தியின் பிரகாரம் கற்பனைச் சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களில் தனித்தனியாக வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் ரூபா 258,110,179 ஆன கற்பனைச் சொத்துக்கள் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணனி மென்பொருள் முறைமையில் கணனி மென்பொருள்கள் மாத்திரம் உள்ளடக்கப்படுவதுடன் கம்பனியின் பெறுமானத் தேய்வுக் கொள்கையின் பிரகாரம் சரியான பெறுமானத் தேய்வு செய்யப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கற்பனைச் சொத்துக்கள் தனித்தனியாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் 34 ஆம் பந்தியின் பிரகாரம் சகல இருப்புக்களின் இழப்புகள், இருப்புப் பதிவளித்தல் மற்றும் நட்டங்கள் அது மேற்கொண்ட காலப்பகுதியில் செலவினமாக இனங்காண | இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் 34 ஆம் பந்தியின் பிரகாரம் விற்பனை செய்யப்பட்ட இருப்பிற்கு உரிய கிரயம் வருமானம் இனங்காணப்பட்ட காலப் பகுதிகளில் இனங்காணப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இருப்பு இழப்பு மற்றும் இருப்பு பதிவழித்தல் செலவினமாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டியிருந்த போதிலும் கம்பனியால் இருப்பு இழப்பு மற்றும் இருப்பு பற்றாக்குறையாக இனங்காணப்பட்ட முறையே ரூபா 43,200,155 மற்றும் ரூபா 106,859,878 விற்பனைக் கிரயத்தில் சேர்க்கப்பட்டு காண்பிக்கப்பட்டதன் காரணமாக விற்பனைக் கிரயம் ரூபா 150,060,033 இனால் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டு இருந்தது. | அவ்வாறே இருப்பு இழப்பு மற்றும் இருப்பு பதிவளித்தலும் உரிய காலப்பகுதியின் போது செலவினமாக இனங்காணப்பட்டுள்ளது. | |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் 42 ஆம் பந்தியின் பிரகாரம் முன்னைய காலப் பகுதிக்கு உரிய சரி செய்தல்கள் கடந்த கால ரீதியில் நிதிக்கூற்றுக்களில் சரி செய்து ஒப்பீட்டு ரீதியான பெறுமதி மீண்டும் வெளியிடப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 165,242,866 ஆன முன்னைய ஆண்டுகளின் சீராக்கங்கள் தொடர்பாக ஒப்பீட்டு ரீதியான பெறுமதிகள் மீண்டும் வெளியிடப்பட வில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க முன்னைய ஆண்டு சரி செய்தல்களின் போது ஒப்பீட்டு ரீதியான பெறுமதிகள் மீண்டும் வெளியிடப்படல் வேண்டும். |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்து ஒன்றின் இழிவுப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயட்காலம் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியின் போதும் மீளாய்வு செய்ய வேண்டி இருந்ததுடன் மாற்றங்கள் ஏற்படுமாயின் இலங்கைக் கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் | 2025 ஆம் ஆண்டின் போது மீண்டும் சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் மூலம் இந்தப் பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முழுமையாக பெறுமானத் தேய்வு செய்வது முடிவடைந்து இருந்த போதும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நியாயமான பெறுமதியை கணக்குகளில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீட்டு மதிப்பீடுகளின் மாற்றமாக கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதியில் முழுமையாக மீளாய்வு செய்யப்பட்டு முடிவடைந்து இருந்த போதும் அதனை தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்ட கிரயம் ரூபா 690,055,293 ஆன 06 தொகுதிகளுக்கு உரிய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் 06 தொகுதிகளுக்கு உரிய சொத்து விடயங்கள் 2344 விடயங்களின் கிரயம் ரூபா 1 வீதம் கூட்டுமொத்தமாக ரூபா 2,344 ஆக மீளாய்வாண்டின் போது நிலையான சொத்துப் பதிவேட்டிலும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டமையால் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சொத்துக்களின் சரியான பெறுமதி வெளிப்படுத்தப்படவில்லை. | | வேண்டும். சகல சொத்துக்களினதும் சரியாக பெறுமதி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஊ) | கம்பனியின் விற்பனை கடைகள் / களஞ்சியங்கள் போன்றவை நடாத்திச் செல்வதற்கு வெளித்தரப்பினர்களுக்கு வாடகை அடிப்படையில் 379 கட்டிடங்கள் பெறப்பட்டிருந்ததுடன் அதற்குரிய உடன்படிக்கை இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 09 ஆம் பந்தியின் பிரகாரம் வாடகை உடன்படிக்கையாக இனங்காண்பதற்குப் பதிலாக | நியமத்தின் பிரகாரம் வாடகையாக அந்த சொத்துக்களை கட்டுப்படுத்தும் சொத்துக்கள் மாத்திரமே கணக்கீட்டு செய்யப்பட முடியும். எனினும் இந்த கட்டிடத்தை நிர்வகித்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான தீர்மான உரித்து லங்கா சத்தொசவிடம் காணப்படவில்லை. அதன் பிரகாரம் இதனைச் சரியாக வாடகையாக | வெளித்தரப்பினரிடம் இருந்து வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடங்கள் தொடர்பாக நிதி அறிக்கையில் நியமம் 16 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வாடகை உடன்படிக்கையாக இனங்காணப்பட்டிருந்தது. மேலும் விற்பனைக் கடைகள் / களஞ்சியங்கள் போன்ற கட்டிடங்கள் வாடகைக்குப் பெறும் போது நியமத்தின் 22 ஆம் பந்தியின் பிரகாரம் பயன்படுத்தப்பட்ட சொத்து ஒன்றாக (right of- use asset) மற்றும் குத்தகை பொறுப்பாக இனங்காண்பதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் செலுத்தப்பட்ட ரூபா 819,327,408 வாடகை செலவினமாக காலப் பகுதியில் இலாபத்தில் சீராக்கப்பட்டிருந்தது. | கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனத்திற்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள வெளிசறை விற்பனைக் கடை அமைந்துள்ள கட்டத்தை அபிவிருத்தி செய்வதற்காக கம்பனியால் செலவிடப்பட்ட ரூபா 96,913,945 பெற வேண்டிய மீதியாக அல்லது செலவினமாக காண்பிப்பதற்குப் பதிலாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 செப்தெம்பர் மாதம் இந்த நிறுவனம் கலைக்கப்பட்டு அந்த சொத்துக்கள் லங்கா சத்தொச இன் உரிமைக்காக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அந்த விடயங்கள் லங்கா சத்தொச இற்கு கையளிக்கப்படும். | செலவினங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | விற்பனைக் கிரயத்தைக் கணிப்பிடும் போது மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழியில் நின்ற இருப்புக் கணக்கில் காணப்பட்ட ரூபா 9,145,626 செலவு மீதி குறைத்துக் காண்பிக்கப்பட்டமை, Default Batch Transfer மற்றும் Default Batch Clearance | இந்த பிரச்சனைகளை இனங்கண்டு 2024 இன் வருடாந்த கணக்ககளில் தீர்த்து வைக்கப்படும். | விற்பனைக் கிரயம் சரியாகக் கணிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | என்ற கணக்குகளில் காணப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 35,704,903 செலவு மீதி இருப்பு இழப்பீடாக காண்பிக்காமல் விற்பனைக் கிரயத்தில் சீராக்குதல், இருப்பு சீராக்கக் கணக்கில் ரூபா 18,585,459 மீதி விற்பனைக் கிரயத்தில் இருந்து குறைத்துக் காண்பிக்கப்பட்டமை, விற்பனைக் கிரயத்தில் சீராக்க வேண்டி இல்லாத கூட்டுமொத்தமாக ரூபா 39,500,596 ஆன மீதி விற்பனைக் கிரயத்தில் கழித்துக் காண்பிக்கப்பட்டமை மற்றும் முன்னைய ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்படாத வழங்குனர்களுக்கு மீள அனுப்புதல் ரூபா 912,102 இருப்பு கணக்கில் செலவு வைப்பதற்குப் பதிலாக விற்பனைக் கிரயத்தில் இருந்து குறைத்துக் காண்பிக்கப்பட்டமை போன்ற காரணத்தின் அடிப்படையில் மீளாய்வாண்டின் விற்பனைக் கிரயம் ரூபா 103,848,686 இனால் குறை கணிப்பீட்டிற்கு உட்பட்டு இருந்தது. | | |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்து வைக்கப்படாத வைப்புக் கணக்கில் காணப்பட்ட ரூபா 1,168,620 இனங்காணப்படாத நேரடி வைப்பை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டின் போது இந்த நேரடி வைப்புக்களை இனங்காண்பதற்காக சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாது உள்ளது. | நிதி அனுப்பிய தரப்பினரை இனங்கண்டு சரியாகக் கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வியாபாரக் கடன் கொடுத்தோரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடன் மீதி மற்றும் பேரேட்டு மீதிகளை ஒப்பீடு செய்த போது ரூபா 249,206,844 இனால் பேரேட்டுக் கணக்குகளை விட கடன் கொடுத்தோரால் உறுதிப்படுத்தப்பட்ட மீதி அதிகரித்தும் ரூபா 111,882,873 இனால் பேரேட்டு மீதிகளை விட கடன் கொடுத்தோர் உறுதிப்படுத்தல் மீதி குறைந்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | 2023.12.31 ஆந் திகதி வரையில் ஒய்வு பெறச் செய்யப்படாத காசோலைகள் காணப்பட்டமையும் ஆண்டின் இறுதியில் அனுப்பப்பட்ட பொருட்கள் அதுவரையில் கிடைக்காது இருந்தமையும், பொருள் மீள அனுப்புவதில் காணப்பட்ட வேறுபாடுகளும் | கடன்கொடுத்தோர் பேரேட்டு மீதி மற்றும் மீதி உறுதிப்படுத்துதலில் இணக்கம் செய்து தேவையான சரி செய்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காரணமாக சுட்டிக்காட்ட முடியும். | |
| (உ) | கம்பனியால் நிதிக் குத்தகை முறைமையின் கீழ் பெறப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 335,120,765 பெறுமதியான உபகரணங்கள், பெயர்ப் பலகை, தளபாடப் பொருட்கள் மற்றும் பொருத்திகளக்கு உரிய குத்தகை உடன்படிக்கை 10 இன் தெரிவுப் பரிசோதனையின் கீழ் நிதிக்கூற்றுக்களுக்குள் கொண்டு வரப்பட்ட குத்தகைக்க கடன் கொடுத்தோர் பெறுமதி ரூபா 80,446,553 மற்றும் உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்ட குத்தகைக் கடன் கொடுத்தோர் பெறுமதி ரூபா 116,678,625 ஆனமையால் ரூபா 36,232,072 வேறுபாடு காணப்பட்டது. | உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட பெறுமதியை விட குறைந்த பெறுமதி செலுத்தப்படுமாயின் பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் ஆகும். அந்த குறைந்த பெறுமதி தொடர்பாக உரிய வழங்குனர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | குத்தகை சொத்துக்கள் மற்றும் குத்தகைப் பொறுப்புக்கள் மீதிகளை இணக்கம் செய்து சரியாகக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்ககள் அல்லது அறிக்கைகள்

| | விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கிரயம் | 3,976,321,552 | 3,576,124,612 | 400,196,940 | மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்வதன் மூலம் இந்தப் பிரச்சனைகள் தீர்த்து வைக்கப்படும். | கணக்கு மீதிகள் நேரொத்த அறிக்கையுடன் ஒப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் சரியாகக் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வருடாந்த பெறுமானத் தேய்வு | 474,675,403 | 357,033,733 | 117,641,670 | மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீடு | மேற்படி |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | செய்வதன் மூலம் இந்தப் பிரச்சனைகள் தீர்த்து வைக்கப்பட்டும். | |
| (இ) | கற்பனைச் சொத்துக்கள் | 306,875,996 | 240,006,000 | 66,869,996 | கற்பனைச் சொத்துக்கள் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்குதல் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படுவதுடன் அதுவரையில் மென்பொருள் முறையின் கீழ் உள்ளடக்கப்பட்ட நாட்குறிப்புக்களின் மூலம் கற்பனைச் சொத்துக்கள் கணக்குகளுக்கு மாற்றப்பட்டுள்ளது. | மேற்படி |
| (ஈ) | கற்பனைச் சொத்துக்களின் பெறுமானத் தேய்வு | 63,274,249 | 59,221,016 | 4,053,233 | மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் மீள் மதிப்பீட்டின் மூலம் பிரச்சனைகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. | மேற்படி |
| (உ) | வியாபார இருப்புக்கள் | 8,037,622,194 | 7,479,538,061 | 558,084,133 | 2023 கணக்காண்டுக்கு உரிய 2024 சனவரி மாதம் மேற்கொள்ளப்பட்ட இருப்புக் கணிப்பீடு ஒவ்வொரு நாட்களிலும் மேற்கொள்ளப்பட்டதுடன் 2023.12.31 இல் உள்ளவாறு கணனி முறைமை stock roll back நடைமுறையின் மூலம் சரியான இருப்புக்கள் கணனி முறைமையின் ஊடாக பரிமாற்ற வேண்டியிருந்த போதிலும் தற்போது | வியாபார இருப்பு ஆண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு பௌதீக ரீதியில் பரீட்சித்து நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப் படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | காணப்படுகின்ற கணனி முறைமையில் அவ்வாறான வசதிகள் வழங்கப்பட்டிருக்க வில்லை. |

### 1.5.4 அதிகாரப் பலம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகார பலம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரி அங்கீகாரம் இன்றி மீளாய்வாண்டில் 10 உத்தியோகத்தர்களுக்கு இடைக்காலப் படியாக ரூபா 2,500,000 மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்கும் பிரதி பொது முகாமையாளர்கள் 05 பேர்களுக்கும் மாதம் ஒன்றுக்கு ரூபா 75,000 வீதம் கூட்டுமொத்தமாக ரூபா 3,292,500 செயலாற்றல் படியாக செலுத்தப்பட்டிருந்தது. | தகவல் தொழில்நுட்பப் பிரிவில் 10 உத்தியோகத்தர்களுக்காக இடைக்காலப் பணியும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் மற்றும் 05 பிரதி பொது முகாமையாளர்களுக்கு செயலாற்றல் படியாகவும் செலுத்தப்பட்டுள்ள தொகை பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் படி செலுத்தப்பட்டுள்ளது. | திறைசேரி அங்கீகாரம் பெற்றுக் கொண்ட பின்னர் இடைக்காலப் படி மற்றும் செயலாற்றல் படிகள் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அங்கீகாரம் இன்றி மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளாயின் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.5 கம்பனியின் தொடர்ச்சியான இருப்பு

| அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மேலே குறிப்பிடப்பட்ட 05 வருடங்களுக்கு அண்ணளவாக ரூபா 35,424,509 முதல் ரூபா 3,158,544,037 வரையான வீச்சில் தொடர்ச்சியாக செயற்பாட்டு நடவடிக்கைகளில் பற்றாக்குறை ஒன்று அறிக்கையிடப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 695,233,136 ஆகும். மேலும் மீளாய்வாண்டின் இறுதியில் கம்பனியின் மொத்த சொத்துக்களின் பெறுமதியில் ரூபா 11,663,026,809 ஆக இருந்ததுடன் மொத்தப் பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 22,746,261,338 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் | மறை உரிமை மூலதனப் பெறுமதியை பகுப்பாய்வு செய்த போது அரசாங்கத்தின் தீர்மானத்தின் அடிப்படையில் 2014/15 ஆண்டுகளின் போது அரிசி இறக்குமதியினால் ஏற்பட்ட ரூபா 6.8 பில்லியன் நட்டம் (அறிக்கையின் பிரகாரம்) இதில் உள்ளடக்கப்பட்டதுடன் அதன் மூலம் இந்த நட்டம் தொடர்ந்தும் அதிகரித்து இருந்தது. அதன் பிரகாரம் நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பாக எழுந்திருத்த மூலதனத்தை தீர்த்து வைப்பதற்காக பணிப்பாளர் சபை பிரதி நிதித்துவப்படுத்தி பொதுத் | முகாமைத்துவத்தால் கம்பனியின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பாக கவனம் செலுத்து செயற்பாட்டு நடவடிக்கைகள் அதிகரித்துக் கொள்வதற்காக பொருத்தமான உபாய திட்டங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| இறுதியில் சொத்துக்களை விஞ்சி ரூபா 11,083,234,529 பொறுப்புக்களின் அளவு ஒன்று காணப்பட்டமை கம்பனியின் தொடர்ச்சியான இருப்புத் தொடர்பில் பாதகமானதாக தாக்கமளித்து இருந்தமை கணக்காய்வின் போது தாக்கமளிக்கப்பட்டிருந்தது. | திறைசேரி பிரதி நிதிகளுடன் கலந்துரையாடலின் பிரகாரம் ஏற்பட்ட விசேட பொதுக் கூட்டம் (EGM) கோரப்பட்டிருந்தது. அதன் அடிப்படை நோக்கம் நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பிற்குப் பதிலாக மூலதன முதலீடு (Equity infusion) பெற்றுக் கொள்ளல் ஆகும். | |

### 1.5.6 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 08 கணக்கு விடயங்களுக்கு உரிய பெறுமதி ரூபா 579,723,727 இற்காக விரிவான பட்டோலைகளும், பெறுமதி ரூபா 83,392,226 ஆன இருப்பிற்காக இருப்பு சான்றுறுதிப்படுத்தல் அறிக்கை, பெறுமதி ரூபா 1,503,112,724 இற்காக மீதி உறுதிப்படுத்தல் கடிதம் மற்றும் பெறுமதி ரூபா 17,622,322 இற்காக காலப் பகுப்பாய்வு போன்ற கணக்காய்வுச் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | நீண்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற மீதியில் கணக்கு மீதிகளுக்காக விரிவான பட்டோலைகள் அல்லது எழுத்து மூல சான்றுகள் பெற்றுக் கொள்ள முடியாது உள்ளது. நிறுத்தி வைத்தல் வரி, வாடகை வைப்புக்கள் மற்றும் வியாபார கடன் பட்டோருக்காக இழப்பீட்டு ஒதுக்கங்கள் மேற்கொள்ளல் தொடர்பாக பட்டோலை மற்றும் பணிப்பாளர் சபை அங்கீகாரம் கணக்குகள் சமர்ப்பிக்கும் போது வழங்கப்பட்டுள்ளது. விற்பனைக் கடைகளில் காணப்பட்ட காசு மற்றும் Cridit Card Control கணக்குகள் தொடர்பான பட்டோலை 2024 ஆம் ஆண்டு முதல் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. பரிசு உறுதிச் சீட்டுக்கள் விற்பனையின் போது உரிய தரப்பினர் குறிப்பிடப்படாது இருந்ததுடன் உறுதிச் சீட்டுக்களின் குறியீடு மாத்திரம் பட்டோலைகளில் குறிப்பிடப்படுகின்றது. 2023.12.31 இல் உள்ளவாறு நுகர்வுப் பொருள் இருப்பு மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாது இருந்ததுடன் கடன் பட்டோர் மீதி உறுதிப்படுத்தல் கடிதத்திற்காக பதிலளிக்கப்படவில்லை. | மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு உரிய பட்டோலைகளை பேணிச் செல்வதற்கும் மற்றும் கணக்காய்வுச் சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டிய பணம்

| அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டு முதல் விற்பனைக் கடைகள் மற்றும் 07 களஞ்சியங்களுக்காக செலுத்த வேண்டிய வாடகைப் பெறுமதியான ரூபா 7,544,233 மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2015 ஆம் ஆண்டு முதல் ஏழு களஞ்சியங்களுக்காக செலுத்த வேண்டிய வாடகைப் பெறுமதியான ரூபா 7,544,233 எதிர்காலத்தில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | உடன்படிக்கை செய்யப்பட்ட செலவினங்களை தாமதம் இன்றி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் 8(2)(அ)(ii) பிரிவு மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டத்தின் 16(i) ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியின் விற்பனைக் கடைகளில் சேவையாற்றுகின்ற நாளாந்த சம்பளம் செலுத்துகின்ற 573 ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்காக பதிவு செய்து பங்களிப்புப் பணம் செலுத்தப்பட்டிருக்க வில்லை. | இந்தப் பிரச்சனைகளை தீர்த்து வைப்பதற்காக நாளாந்த ஊழியர்கள் நிறுவன ரீதியில் கேள்வி நடைமுறையின் ஊடாக தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நாளாந்த சம்பளம் செலுத்துகின்ற ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்காக பதிவு செய்து பங்களிப்புப் பணம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்காக வருடாந்த பொதுக் | எதிர்காலத்தில் உரிய பிரகாரம் கூட்டத்தை நடாத்துவதற்கு | கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் வருடாந்த பொதுக் |

| | | | | |
|---|---|---|---|---|
| | சட்டத்தின் 133 ஆம் பிரிவு | கூட்டம் 2025 யூலை 31 ஆம் திகதி வரை நடாத்தப்பட்டிருக்க வில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும். | கூட்டத்தை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு சட்டத்தின் 5(1) ஆம் பிரிவு | 2019 முதல் 2023 வரையான காலப் பகுதியில் சேவையில் இருந்து விலகிச் சென்ற பணிக் கொடைக்காக உரித்துக் கோருகின்ற 243 ஊழியர்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 51,052,620 ஆன பணிக் கொடைக் கொடுப்பனவு 2025 யூலை 31 ஆம் திகதி வரையிலும் செலுத்தப்பட்டிருக்க வில்லை. | தொழில் திணைக்களத்தின் கட்டளையின் பிரகாரம் உரிய பணிக் கொடைப் பணம் மற்றும் மிகைக் கட்டணம் தவணை ரீதியக சேவையில் இருந்து விலகிச் சென்ற முறையில் செலுத்துவதற்கு எடுக்கப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் 2025.08.13 ஆம் திகதி முதலாவது ரூபா 4.1 மில்லியன் 21 ஊழியகர்ளுக்காக விடுவிக்கப்பட்டுள்ளது. | பணிக்கொடை செலுத்துதல் குறித்துரைத்த திகதியின் போது செலுத்துவதன் மூலம் தண்டப்பணம் செலுத்துவதைத் தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஈ) | 2022 நவம்பர் 21 ஆந் திகதிய பீஈடீ 08/2022 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை | மூலதன மற்றும் மீண்டெழும் செலவினத்திற்காக பொதுத் திறைசேரியில் இருந்து நிதி பெற்றுக் கொள்ளப்படுமாயின் ஊழியர்களுக்காக சேமிக்கப்பட்ட விடுமுறையின் அடிப்படையில் படிகள் செலுத்துதல் முடியாது இருந்த போதிலும் அதற்கு முரணாக கம்பனியால் ஊழியர்களின் சேமிக்கப்பட்ட விடுமுறையின் அடிப்படையில் படியாக மீளாய்வாண்டின் போது ரூபா 14,119,773 செலுத்தப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டிற்காக சேமிக்கப்பட்ட விடுமுறைகளுக்காக செலுத்தும் போது பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பொது முயற்சிகளின் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முராணாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை மீள அறவிடுதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதி இலக்கம் 1/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் | 2023 ஏப்ரல் 04 ஆந் திகதியின் பின்னர் இடர் குழு ஒன்றின் கூட்டம் ஒன்று நடாத்தப்பட்டிருக்க வில்லை. | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பணிகளுடன் இடர் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நுழைவு ஒன்று அங்கீகரித்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன் தொடர்ந்தும் வலுப்படுத்தும் | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் இடர் குழு ஒன்றை நடாத்துவதற்கும் அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட |

| | | | | |
|---|---|---|---|---|
| | வெளியிடப்பட்ட பொது முயற்சியாளர்களை உள்ளடக்கிய கட்டுப்பாட்டிற்கான வழிகாட்டியின் 4.3 ஆம் பந்தி | | நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 1/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையுடன் வெளியிடப்பட்ட பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டு கைநூல் | | | |
| (i) | 3.2 (V) ஆம் பந்தி | கம்பனியினால் அமுல்படுத்தப்படுகின்ற ஊக்குவிப்பு திட்ட முறைமைக்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. அதன் பிரகாரம் அங்கீகாரம் இன்றி பதவியணியினருக்கு ரூபா 28,096,000 ஊக்குவிப்புப் படி செலுத்தப்பட்டுள்ளது. | பதிலளிக்கப்படவில்லை | ஊக்குவிப்புப் படி முன்மொழிவுத் திட்டத்திற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டதன் பின்னர் செலுத்துதல் வேண்டும். |
| (ii) | 3.5 ஆம் பந்தி | அமைச்சரவை அங்கீகாரம் இன்றி கம்பனியின் உத்தியோகத்தர் ஒருவர் 2022 மே 23 ஆம் திகதி முதல் தற்காலிக அடிப்படையில் வரிசை அமைச்சுக்கு | வியாபார, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் (நிர்வாகம்) இன் 2022.05.23 அந் திகதிய கடிதம் மூலம் லங்கா சத்தொச நிறுவனத்தின் தேவை மற்றும் அவசர நடவடிக்கைகள் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் செலுத்தப்பட்ட சம்பளம் மற்றும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நியமிக்கப்பட்டதுடன் அத் திகதியில் இருந்து கணக்காய்வுத் திகதியான 2024 மார்ச் 31 ஆந் திகதி வரை சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 2,536,254 செலுத்தப்பட்டதுடன் அந்த தொகை அமைச்சில் இருந்து அறவிடப்பட்டிருக்க வில்லை. | அமைச்சு மற்றும் தொடர்புபடுத்தும் நடவடிக்கைகளுக்காக அந்த உத்தியோகத்தர் நியமிக்கப்பதற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | வேதனங்கள் மீள அறவிடப்படல் வேண்டும். |
| (iii) | 6.6 ஆம் பந்தி | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 02 வருடங்கள் 40 நாள் தாமதத்தின் பின்னர் 2025 ஏப்ரல் 09 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் நிதிக்கூற்றுக்களுடன் வரைவு வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட வில்லை. | 2025 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் குறித்துரைத்த காலப் பகுதியில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறித்துரைத்த திகதியில் கணக்குகள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 2022 சனவரி 18 ஆந் திகதிய இலக்கம் 02/2022 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை | மாதாந்த தொலைபேசிப் படிக்காக உரித்துப் பெறாத கம்பனியின் 77 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 786,645 தொகை தொலைபேசிப் படியாக செலுத்தப்பட்டுள்ளது. | 2022 சனவரி 18 ஆந் திகதிய இலக்கம் 02/2022 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அதில் இலக்கம் 02 இன் கீழ் உள்ள உத்தியோகத்தர்களின் சம்பளத் தொகுதியின் பிரகாரம் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் ஏனைய நிறைவேற்றுத் தரத்தில் உள்ள உத்தியோகத்தர்களுக்கும் தொலைபேசிப் படி செலுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் உரித்து பெறுகின்ற உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் தொலைபேசிப் படி செலுத்த வேண்டியிருந்ததுடன் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக செலுத்தப்பட்ட தொலைபேசிப் படிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய | சுற்றறிக்கையின் பிரகாரம் ஆலோசனையாளர் | | |

| | | | |
| --- | --- | --- | --- |
| இலக்கம் 01/2020 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.1, 6.2 மற்றும் 6.4 ஆம் பந்திகள் | போன்ற சேவை ஒன்று 90 நாட்களை விஞ்சாத வகையில் குறுங்கால அடிப்படையில் மாத்திரம் அவசர சேவை ஒன்றாக பெற வேண்டி இருந்ததுடன் ரூபா 150,000 ஆன ஆகக் கூடிய படி ஒன்று உரிய பணிகள் முடிவடைந்த பின்னர் அமைச்சின் செயலாளரின் பிரத்தியேக அங்கீகாரத்தின் அடிப்படையில் செலுத்த முடியாது இருந்த போதிலும் அதற்கு முரணாக | | |
| | i. கம்பனியின் உள்நாட்டுக் குடிபான விற்பனைச் சாலைகளுக்காக அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக திறைசேரி அங்கீகாரம் இன்றி சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக ஆலோசனையாளர் நியமிக்கப்பட்டதுடன் 2022 யூன் முதல் 2024 மே வரை ரூபா 3,496,789 தொகை செலுத்தப்பட்டுள்ளது. | 2021.04.20 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 100 மதுபான அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் அதுவரையில் மதுபான அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளும் நடைமுறை மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் இந்தப் பணிகளை மிக செயற்திறனாகவும் குறைந்த செலவினத்தின் கீழும் மேற்கொள்ளும் அடிப்படை நோக்காகக் கொண்டு நிறுவனத்தில் அது மற்றும் அது தொடர்பான அறிவுடன் உள்ள பொருத்தமான நபர் ஒருவர் காணப்படாமையினால் அமைச்சு ஆலோசனையின் அடிப்படையில் அது தொடர்பாக அறிவுள்ள முன்னாள் சத்தொச பொது முகாமையாளர், முன்னாள் தலைவர் மற்றும் முன்னாள் பிரதாரன நிறைவேற்று உத்தியோகத்தரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆலோசனையாளர் பதவி ஒன்றின் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க ஆலோசனையாளர் பதவிக்காக ஆட்சேர்க்கும் போது திறைசேரி அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் அதன் பிரகாரம் செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ii. 2022 செப்தெம்பர் 01 ஆந் திகதி முதல் 06 மாத காலப் பகுதியில் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த சட்ட உத்தியோகத்தர்களின் சேவைக் காலம் 2022 மார்ச் 22 ஆந் திகதி முதல் 2023 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரை மீண்டும் 2023 செப்தெம்பர் 01 ஆம் திகதி முதல் 2024 பெப்ரவரி 29 வரையும் ஆக 01 வருடம் 06 மாத காலம் நீடிக்கப்பட்டிருந்தது. உத்தியோகத்தருக்கு ஆலோசனைக் கட்டணமாக சுற்றறிக்கைக்கு முரணாக ரூபா 2,092,500 செலுத்தப்பட்டிருந்தது. | இந்த அங்கீகரிக்கப் பட்ட பதவியணியில் காணப்படாத பதவியாக இருந்ததன் காரணமாக நிறுவனத்தின் தேவையின் அடிப்படையில் இந்த உத்தியோகத்தர் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டதுடன் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க விசேட பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கும் போது திறைசேரி அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | 2017 மே 16 ஆந் திகதி இலக்கம் DMS/1741 என்ற முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | கம்பனியின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் மற்றும் பிரதி பொது முகாமையாளர்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட மாதாந்தப் படி முறையே ரூபா 95,000 மற்றும் ரூபா 90,000 ஆக இருந்த போதிலும் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்கு ரூபா 250,000 மற்றும் பிரதி பொது முகாமையாளர் 05 பேர்களுக்கு ரூபா | பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பிரகாரம் செலுத்தப்பட்டிருந்தது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அங்கீகரித்துள்ள கொடுப்பனவுகள் அளவை விஞ்சி செலுத்தும் போது திறைசேரியின் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அங்கீகாரம் இன்றி மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை மீண்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 150,000 வீதம் மாதாந்தப் படி செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் போது பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்கும் பிரதி பொது முகாமையாளர்களுக்கும் மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகை முறையே ரூபா 1,860,000 மற்றும் ரூபா 2,094,400 ஆகும். | | எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | 2015 மே 25 ஆந் திகதிய இலக்கம் பீஈடீ 01/2015 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை | கடமை மற்றும் தனிப்பட்ட பயன் பாட்டிற்காக உத்தியோகபூர்வ வாகனங்களைப் பயன் படுத்துதல் அல்லது உத்தியோகபூர்வ வாகனங்களை பயன் படுத்துவதற்குப் பதிலாக போக்குவரத்துப் படிகளைப் பெற்றுக் கொள்வதற்கு உரித்து இன்றிய MM 1-1 தொகுதியின் பதவிகளில் இருக்கின்ற 19 உத்தியோகத்தர்களுக்கு 2023 ஆம் ஆண்டின் போது போக்குவரத்துப் படியாக ரூபா 2,807,083 செலுத்தப்பட்டிருந்தது. | பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் மாத்திரம் உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் இதுவரையில் அந்த அங்கீகாரம் கிடைத்திருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் உரித்து இல்லாத உத்தியோகத்தர்களு க்கு கொடுப்பனவுகளை செலுத்தும் போது திறைசேரி அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். அங்கீகாரம் இன்றிய கொடுப்பனவுகளை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 695,233,136 நட்டமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 35,424,509 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 659,808,627 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஏனைய வருமானம் ரூபா 192,517,648 இனால் அதிகரித்து விற்பனை மற்றும் விநியோக செலவினம் ரூபா 539,402,823 இனால் குறைவடைந்து இருந்த போதிலும் அறவிட முடியாக் கடன், இருப்பு இழப்பு மீள அறவிடல் , இருப்பு மீள அனுப்புதல் மற்றும் கடன் கொடுத்தோர் வரவு மீதிகளுக்கான கூட்டுமொத்தமான ரூபா 849,869,028 ஒதுக்குதல், நிர்வாக செலவினம் ரூபா 213,057,712 இனால் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை அமுல்படுத்தப்பட்ட பொது முயற்சி வள திட்டமிடல் முறைமைக்காக வேலை பூர்த்தி செய்தல் அறிக்கை இன்றி ஒப்பந்தகாரருக்கு ரூபா 83,000,000 செலுத்தி ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டதுடன் ஒப்பந்தத்தில் காண்பிக்கப்படாத பூர்த்தி செய்தல் தொடர்பாக உரிய ஒப்பந்தகாரரால் கம்பனிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கிற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 7,656,904 தொகை வழக்கு கட்டணமாக செலவிடப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டின் போது கம்பனியின் ஒன்றிணைந்த தொழில் முயற்சி வள திட்ட முறைமை (ERP system) விரிவு படுத்துவதற்காக தனியார் நிறுவனம் ஒன்று தெரிவு செய்யப்பட்டு ரூபா 201 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இந்த பெறுகைப் பணிகளுக்கு உரிய சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்படாது இருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தகாரருக்கு செலுத்தும் போது இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் (ICTA) இறுதி முறைமை கணக்காய்வு மற்றும் வாசகர்கள் ஏற்றுக் கொள்ளும் அவதானிப்புக்கள் கணக்காய்வு திகதியான 2025 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இந்த வழக்கிற்கு உரிய ரூபா 112,941,954 தொகை அறவிடுவதற்கு நியாய சபை நிலையம் ஒன்றில் வழக்கு ஒன்றை தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கு தற்போது விசாரணையில் காணப்படுவதுடன் நியாய சபை நிலையத்தில் தற்போதய தலைவர் கேட்டு விலகி இருந்ததுடன் புதிய தலைவர் நியமிக்கப்பட்ட உடன் வழக்கை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | கம்பனிக்கு ஈடுகொடுக்கும் முறைமையை சரியான திட்டமிடல் மற்றும் சாத்திய வள ஆய்வின் பின்னர் தெரிவு செய்து ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இடம் பெற்ற நட்டத்தை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கம்பனியால் ரூபா 230,269,715 செலவில் கரைச்சிப் பிரதேச சபைக்கு உரியதாக காணப்பட்ட கிளிநொச்சி பிரதேசத்தில் காணி ஒன்றில் கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டதுடன் அதை அந்த பிரதேச சபையினால் 2014 நவம்பர் 19 ஆம் திகதி வணிக அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. மேற்குறிப்பிடப்பட்ட பிரகாரம் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்ட போது உரிய காணியின் உரித்தை கையேற்பதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்தக் கட்டிடம் நிர்மாணிப்பதற்காக செலுத்தப்பட்ட தொகை மூலதனமாக்குதல் இது மேற்கொள்ளப்பட்ட செலவினத்தில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் நிறுவனத்திற்கு வருமாயின் மற்றும் அதன் சட்ட ரீதியான உரித்து லங்கா சத்தொச இற்கு கையளித்தல் என்ற காரணத்தின் அடிப்படையிலேயே மூலதனமாக்கப்பட்டிருந்தது. தற்போது இதன் உரித்து லங்கா சத்தொச இற்கு கையளிப்பதற்காக உரிய சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது. | காணியின் உரித்தை தாமதம் இன்றி கம்பனிக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாட்டு எல்லைக்கு முரணாக உள்நாட்டு வழங்குனர்கள் இருவரினால் 2021 யூன் 21 ஆம் திகதி இறக்குமதி செய்யப்பட்ட சீனி மெற்றிக்தொன் 2,269.5 நுகர்வுக்கு பொருத்தமற்ற நிலையில் காணப்பட்ட போது பெறுகைத் திட்டம் பின்பற்றப்படாமல் 2022 திசெம்பர் 18 ஆம் திகதி ரூபா 389.8 மில்லியன் செலவில் கம்பனியால் கொள்வனவு செய்து உள்நாட்டு இனிப்புப் பண்டங்கள் உற்பத்திக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. | 2022.11.01 ஆம் திகதிய இலக்கம் 22/1753/627/021 என்ற அமைச்சரவை பத்திரத்தின் பிரகாரம் வழங்குனர்களிடம் இருந்து சீனி இருப்பை கொள்வனவு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டதுடன் சீனி இருப்பை மீண்டும் இனிப்பு பண்டக் கம்பனிகள் 05 இற்கு விற்பனை செய்வதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கி இருந்தது. | நுகர்வுக்கு பொருத்தமற்ற பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய உற்பத்திகளைக் கொள்வனவு செய்தல் அல்லது விற்பனை செய்தல் மேற்கொள்ளாது இருத்தல் வேண்டும். |

## 3.2 பெறுகைகள் முகாமைத்துவம்

| | அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகைகள் வழிகாட்டிக் | 2025 ஆம் ஆண்டிற்காக இது தயாரிக்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக்கு இணங்க பெறுகைத் |

| | | | |
|---|---|---|---|
| | கோவையின் 4.2.1 வழிகாட்டியின் பிரகாரம் ஆகக் குறைந்தது மூன்று வருட காலப் பகுதிக்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகளை உள்ளடக்கி பிரதான பெறுகைத் திட்டம் ஒன்று கம்பனியின் வியாபார இருப்புக்களை வழங்குதல் தொடர்பாக மீளாய்வாண்டிற்கான பெறுகைத் திட்டம் ஒன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | விற்பனை மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்திற்காக பரிசினை வழங்குவதற்கும் மற்றும் நிறுவனத்தின் ஊழியர்களுக்கு வழங்குவதற்காக ரூபா 5,112,850 செலவில் 315 கையடக்க தொலைபேசிகள் கொள்வனவு செய்தல் மற்றும் ரூபா 2,354,000 தொகையில் 15 மடி கணனிகள் கொள்வனவு செய்யும் போது அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.3.1(அ), 2.3.2(இ), 5.3.11, 5.4.8 மற்றும் 8.9.1 வழிகாட்டிகளுக்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பெறுகைகள் மேற்கொள்ளுகின்ற போது கிடைக்கின்ற கோரிக்கையின் மதிப்பீடு பெற்றுக் கொள்ளப்படுவதுடன் இந்தப் பெறுகைகளுக்காக கோரிக்கை இடுவதாயின் தேவையாக உள்ள பிரிவுகளில் தொழில் நுட்ப அறிவுடன் உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்ட மாதிரிகளுடன் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் அங்கீகாரத்துடன் ஆகும். இந்த பெறுகைகளுக்காக ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படாது இருந்ததுடன் கேள்விக் காப்புறுதி மற்றும் செயலாற்றல் காப்புறுதி பெற்றுக்கொள்ளப்படவில்லை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க பெறுகைத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| | அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட 20 பதவிகளுக்கு உரிய 852 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் விற்பனை உதவியாளர் பதவியில் 281 | கடை பணிப் பொறுப்பு உத்தியோகத்தர் பதவிக்காக தெரிவு செய்யப்பட்ட 07 விண்ணப்பதாரர்களுக்கு இடையே 02 பேர் மாத்திரம் சேவைக்கு அறிக்கை இட்டிருந்தனர். விற்பனைக் கடை முகாமையாளர்கள் பட்ட | ஒட்டுமொத்த பதவியணியினர் தொடர்பாக மீளாய்வை மேற்கொண்டு கம்பனியின் தேவைகளுக்கு ஈடுகொடுக்கின்ற |

| | | | |
|---|---|---|---|
| | ஊழியர்கள் மிகை காணப்பட்டதுடன் அந்த மிகையான ஊழியர்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி சேர்க்கப்பட்டிருந்தனர். கம்பனியின் விற்பனைக் கடைகளுக்காக 3,836 பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டதுடன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் விற்பனை கடை முகாமையாளர், உதவி விற்பனைக் கடை முகாமையாளர், சிரேஸ்ட விற்பனை உதவியாளர் மற்றும் களஞ்சிய உதவியாளர் என்ற 04 பதவிகளுக்கு உரிய 726 வெற்றிடங்கள் காணப்பட்டது | தகைமை காணப்படாமையின் காரணமாக சேவை அனுபவம் மற்றும் செயலாற்றலை அடிப்படையாகக் கொண்டு உதவிக் கடை பணிப் பொறுப்பு உத்தியோகத்தர் பதவிக்காக பதிற் கடமை பதவியில் நியமிக்கப்பட்டு பதிற் கடமைப் படி ஒன்று 2023.01.01 ஆந் திகதி முதல் செலுத்தப்படுகின்றது. | பதவியணியினரை ஸ்தாபித்து அங்கீகரித்துக் கொள்ளல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியின் போது கம்பனியால் 573 ஊழியர்கள் நாளாந்த சம்பளம் செலுத்தும் அடிப்படையில் விற்பனைக் கடைகளுக்காக சேர்க்கப்பட்டிருந்தனர். அவர்களின் வருகை மற்றும் வெளிச் செல்கை கைவிரல் அடையாள இயந்திரம் மூலம் குறிப்பிடப்படாது இருந்ததுடன் கையொப்ப பதிவேட்டின் அடிப்படையில் மாத்திரம் ரூபா 349,041,862 நாளாந்த சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. | நாளாந்தம் சம்பளம் செலுத்தும் திட்டத்தின் கீழ் அமைய அடிப்படையில் ஊழியர்கள் சேர்க்கப்படாது இருந்ததுடன் நாளாந்த ஊழியர் சேவையின் அடிப்படையில் நாளாந்த கொடுப்பனவின் அடிப்படையில் தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சில தொழிலாளர்கள் தொடர்ச்சியாக சேவையில் ஈடுபட்டிருக்காமையின் காரணமாக கைவிரல் அடையாள இயந்திரம் மூலம் வசதிகள் வழங்கப்படவில்லை. உரிய கையொப்ப பதிவேடு விற்பனைக் கடை முகாமையாளரால் சரியாக உறுதிப்படுத்தி வலு முகாமையாளர் மூலம் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படுகின்றது. | நாளாந்தம் சம்பளம் செலுத்தும் அடிப்படையில் சேர்க்கப்பட்ட ஊழியர்களின் வருகை மற்றும் வெளிச்செல்கை குறிப்பிடுவதற்கு முறையான திட்ட முறைமை ஒன்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | விற்பனை செய்தல் மற்றும் வழியில் நின்ற வியாபாரங்கள் இணையவழி வியாபாரங்கள் தொடர்பான தலைவர் (Head of Marketing | முகாமைத்துவ திர்மானத்தின் அடிப்படையில் அது வரையில் பிரதி பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டு | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மாத்திரம் |

and Online Trading) மற்றும் பிரத்தியேக செயலாளர் என்ற சிரேஸ்ட நிலையின் பதவிகள் இரண்டிற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி இரண்டு உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு சம்பளம் மற்றும் படிகளாக கூட்டுமொத்தமாக ரூபா 7,188,333 செலுத்தப்பட்டிருந்தது.

விண்ணப்பதாரருக்கு கையளிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற பணிகளுக்கு பொருந்தும் வகையில் புதிய பதவி ஒன்றின் கீழ் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். ஏனைய தேவைகள் இருக்குமாயின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.